# பரவி வந்த நெருப்புச் சுடர் [8:1-40]

ஸ்தேவானைக் கல்லெறிதலுடன் அப். 7ம் அதிகாரம் முடிவடைகின்றது. ஸ்தேவானுக்கு, அவரது மரணமானது விமரிசையாக முடி சூட்டுதல் என்ற விளைவை உண்டாக்கிற்று. யூதர்களின் ஆலோசனைச் சங்கத்தாருக்கு அது ஒரு கண்டனத்தைப் பெற்றுத்தருதல் என்ற விளைவை உண்டாக்கிற்று. சவுலைப் பொறுத்தமட்டில் அவரது மனச்சாட்சி குத்தப்படுதல் என்ற விளைவை உண்டாக்கிற்று. சபையைப் பொறுத்தமட்டில் - நிறைவாக - ஊழியத்திற்கான கட்டளை நிறைவேற்றப்படுதல் என்ற விளைவை உண்டாக்கிற்று.

இயேசு, அப்போஸ்தலர்களிடத்தில் "உலகமெங்கும் சென்று சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்'' என்று அறைகூவல் விடுத்திருந்தார் (மாற். 16:15; மத். 28:19). "எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் நீங்கள் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" என்று அவர் கூறினார் (1:8). சபையானது ஒரு நகரத்தின் மார்க்க ரீதியான சமூகமாயிருந்தால் போதுமானது என்று அவர் விரும்ப வில்லை. இருப்பினும், 7ம் அதிகார முடிவில் பல ஆண்டுகள் கடந்திருந்தாலும், சபை அடிப்படையில் எருசலேமில் மட்டுமே இருந்தது.

இயேசுவின் திட்டத்திலுள்ள இரண்டாவது கட்டத்திற்கு அப்போஸ்தலர்கள் சென்றிருக்காதது ஏன்? அவர்கள் அவரது அறிவுரைகளைப் புரிந்து கொள்ளவில்லையா? மற்ற பகுதி களுக்கு விரிவாக்குமுன், அவர்கள் எருசலேமைப்பற்றி அதிக மாக எண்ணிக்கொண்டிருந்தார்களா? (பேதுரு தமது தலை யணையில் தலை வைத்துப் படுக்கையில் திருமதி. பேதுருவிடம் இவ்வாறு புலம்புவதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது: "எருசலேமில் உள்ள சபையைக் கட்டிக் காப்பதே பெரும் பாடாக உள்ளது! உலக முழுவதும் இது பரவுகையில் எப்படி

யிருக்கும் என்று உன்னால் கற்பனை செய்ய முடிகிறதா?") காரணம் எதுவாக இருந்தாலும், சுவிசேஷத்தை உலக முழுவதும் எடுத்துச் செல்லுதல் என்ற இயேசுவின் திட்டமானது மூழ்கடிக்கப்பட்டிருந்தது.

அந்த சமயத்தில் தேவன் அடியெடுத்து வைத்து - "எருசலே முக்கு வெளியே நற்செய்தியைக் கொண்டு போக வேண்டிய நேரமிது" என்றார். "அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று; அப்போஸ்தலர் தவிர, மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப் போனார்கள்'' (8:1). இவ்விடத்தில் நாம் சற்று யோசிக்க வேண்டும். தேவன் உபத்திரவத்தைத் தூண்டவில்லை; உபத்திர வத்தின் பின்னால் சாத்தான் இருந்தான், வெறி பிடித்த சவுலை அவனது கருவியாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தான் - ஆனால் தேவன் அதைப் பயன்படுத்தினார். நான் ஒரு பையனாக இருந்த வேளையில், இரண்டாம் உலக யுத்தம் என்ற அகில உலக இடர்ப்பாட்டில் அமெரிக்கா பங்கு பெற்றது. ஆயிரக்கணக்கானவர்களின் உயிரைப் பறித்த அந்தப் பயங் கரமான முரண்பாட்டிற்கு தேவன்தான் காரணம் என்று யாரும் கூறவில்லை, ஆனால் அமெரிக்காவிலுள்ள கர்த்தருடைய சபையின் ஊழிய வாஞ்சையை விழிப்படையச் செய்வதற்கு அந்த யுத்தத்தைத் தேவன் பயன்படுத்தினார். சேவையிலிருந்து கிறிஸ்தவர்கள் வீடு திரும்பியபோது, தூர இடங்களில் சுவிசேஷத்தைக் கூறுவதன் தேவையைச் சொன்னார்கள். பலர் தங்களை ஆயத்தம் செய்துகொண்டு தாங்கள் யுத்தம் செய்த இடங்களுக்கு, குணமாக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லத் திரும்பினர். ஸ்தேவான் மரித்தபோது எழும்பிய உபத்திரவத்தைக் கூட தேவன் இவ்விதமாகவே பயன்படுத்தினார். சபையை அழிப்பதற்குச் சாத்தான் உபத்தி ரவத்தை ஏற்படுத்தினான்; சபையைப் பரப்புவதற்கு தேவன் அதைப் பயன்படுத்தினார்.

அப். 8ம் அதிகாரத்தின் முற்பகுதியில் என்ன நடந்தது என்பதற்கு பல ஒப்புடைமைக் கருத்துக்கள் யூகிக்கப் பட்டுள்ளன. எருசலேமிலிருந்த சபையானது புட்டியில் அடை பட்டதாயிருந்தது என்று ஒருவர் விளக்குகின்றார். சபையை அழிப்பதற்குச் சவுல் மேற்கொண்ட முயற்சிகள் அப்புட்டியை உடைத்தது, அதனால் சபையானது எல்லா திசைகளிலும் பரந்து

*விரிய ஆரம்பித்தது. சவுல், சபையாருக்குக் கொடுத்த உபத்தி ரவத்தை விதைக்கு காற்று செய்யும் செயலாக வேறொருவர் யூகிக்கிறார்; அது சிதறியது, மற்றும் ஒரு மாபெரும் அறு வடையை அளித்தது. கிரீஸ் அல்லது எண்ணெய் பற்றியெறி யும்போது அதை அணைக்க செய்யும் முயற்சி என்பது ஒரு வேளை மிகச் சிறந்த ஒப்புவமையாக இருக்கலாம். அந்நெருப் பின் மீது தண்ணீரை ஊற்றினால் அது நெருப்பை அணைக்காது; மாறாக அது நெருப்பைப் பரவ விடும். அதிகாரம் 8ல் சபையை சவுல் உபத்திரவப்படுத்தியபோது, கிறிஸ்தவ நெருப்புச் சுடரானது பரவத் தொடங்கியது!*

## நெருப்புச் சுடர் பரவுகின்றது (8:1-4)

*பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு அதிகாரம் 8 தொடங்குகின்றது: "அவனைக் [ஸ்தேவான்] கொலை செய்கிற தற்குச் சவுலும் சம்மதித்திருந்தான்" (8:1அ). சவுல் தாம் செய்த வைகளில் ஆலோசனைச் சங்கத்தாரின் ஆதரவைப் பெற்றிருந் தார் என்று வேறு சில பகுதிகளிலும் நாம் அறிகிறோம் (9:1, 2; 22:4, 5; 26:10); அவர் ஆலோசனைச் சங்கத்தாரின் அடியாளாக இருந்தார். அவருக்கு பல உதவியாட்கள் (ஒருவேளை, கூலிக்கு அமர்த்தப்பட்டவர்கள்) இருந்திருப்பார்கள் என்பது நிச்சயம்; அவர் தாமாகவே அவ்வளவு சேதத்தை ஏற்படுத்தியிருக்க முடியாது. ஆயினும் உபத்திரவத்திற்குப் பின்புறம் இயக்கும் சக்தியாக இந்த "வாலிபனாகிய" சவுல் இருந்தார், இவரின் பாதத்தருகில்தான் சாட்சிக்காரர்கள் தங்கள் வஸ்திரங்களை வைத்துவிட்டு, ஸ்தேவானைக் கல்லெறிந்தனர் (7:58).*

*வசனம் 1 தொடர்கின்றது: "அக்காலத்திலே [ஸ்தேவான் மரித்த நாளிலே] எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று" (8:1ஆ). ஸ்தேவான் கொலையுண்ட நிகழ்ச்சி யானது ஆலோசனைச் சங்கத்தாரிடமிருந்து தானாகவே புறப் பட்ட ஒரு பதில் செயலானதால், இந்த உபத்திரவமானது ஐசுவரியம் மற்றும் வல்லமை மிகுந்த அவர்களுடைய இரகசிய அறைகளில் விரிவாகத் திட்டமிடப்பட்டதாயிராமல், ஸ்தேவா னின் கொலை போலவே தானாக புறப்பட்டதாயிருக்கும் என்று நான் கருதுகின்றேன். சுறாக்களின் கூட்டமொன்று அசையும் நீரை, அதில் இரத்தம் பரவும் வரை கவனிக்கும்; பிறகு*

*அந்த சுறாக்கள் கொலை வெறி கொள்ளும். அதே போன்று, ஸ்தேவானின் இரத்தம் சிந்தப்பட்டதைப் பார்த்த இயேசுவின் விரோதிகள் தங்கள் ஆத்துமாக்களில் எல்லா கிறிஸ்தவர்களையும் அழிக்கும் வெறியினால் நிரப்பப்பட்டு வெள்ளமெனப் பாய்ந்தனர்!*

*"அக்காலத்திலே ... மிகுந்த துன்பமுண்டாயிற்று" என்ற சொற்றொடரானது, அதிகாரம் 8ல் முதல் நான்கு வசனங்களில் கூறப்படும் நிகழ்ச்சிகள் யாவும் ஸ்தேவான் கொலையுண்ட அந்த நாளிலேயே நடந்தன என்ற பொருளைத் தருவதில்லை. மாறாக அந்த நாட்களில் உபத்திரவம் தொடங்கி - பல நாட்களாகத் தொடர்ந்தது.*

*உபத்திரவம் எழுந்தபோது, "யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப் போனார்கள்" (8:1இ). இப்பகுதி, 1:8ல் "நீங்கள் எருசலேமிலும், யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும் ... எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்" என்று இயேசு கூறியதைக் குறிக்கின்றது. இயேசுவின் திட்டத்தில் இரண்டாம் கட்டத்தை நாம் அடைந்திருக்கின்றோம்.*

*"அப்போஸ்தலர் தவிர மற்ற யாவரும் ... சிதறப்பட்டுப் போனார்கள்" (8:1இ, ஈ) என்பதைக் கவனியுங்கள். மற்ற கிறிஸ்தவர்களைப் போல அப்போஸ்தலர்கள் ஏன் சிதறப்பட்டுப் போகவில்லை என்று நாம் அறியவில்லை. ஒருவேளை சவுலும் அவரது ஆதரவாளர்களும் அப்போஸ்தலர்களின் வல்லமைக்குப் பயந்து, அப்போஸ்தலர்களைப் பின்பற்றுபவர்கள் இல்லாமலிருந்தால் பயமொன்றும் இல்லை என்று அவர்களைத் தனியே விட்டிருக்கலாம். ஒருவேளை, இடர்ப்பாடுகள் இருப்பினும், எருசலேமிலேயே தங்கி-சவுல் கவனிக்காமல் விட்டுவிட்ட கிறிஸ்தவர்களுக்கு - ஊழியம் செய்ய அப்போஸ்தலர்கள் முடிவு செய்திருக்கலாம், மற்றும் சிறைப்பட்டவர்களுக்கும் ஊழியம் செய்ய அவர்கள் முன் வந்திருக்கலாம். ஒருவேளை வேறு ஏதாவது காரணம் இருந்திருக்கலாம்.[1] லூக்காவின் நோக்கமானது, சபையின் சாதாரண உறுப்பினர்கள் உபத்திரவத்தால் எப்படிப் பாதிக்கப்பட்டனர் என்பதைக் கூறுவதுதானே தவிர, அப்போஸ்தலர்கள் உபத்திரவத்தால் எப்படிப் பாதிக்கப்பட்டனர் என்பதைக் கூறுவதல்ல. முதன் முறையாக அப்போதுதான் சபை முழுவதும் ஒடுக்கப்படுவதற்கு இலக்காயிற்று. அடக்குமுறையின் கீழும் அப்போஸ்*

*தலர்களால் உறுதியாக நிலைநிற்க முடிந்திருந்தது (அதிகாரங்கள் 4 மற்றும் 5). சபையின் மற்ற உறுப்பினர்கள் எப்படியிருந்தனர்? அவர்கள் எவ்விதம் முன்னேறினார்கள்?*

*நாம் அதிகமாய் வியப்படையத் தேவையில்லை, ஏனெனில் வசனம் 2ல், "தேவபக்தியுள்ள மனுஷர் ஸ்தேவானை எடுத்து அடக்கம்பண்ணி, அவனுக்காக மிகவும் துக்கம் கொண்டாடினார்கள்" (வ. 2) என்று கூறப்படுகிறது. நொறுக்கப்பட்ட ஸ்தேவானின் உடல் இரத்தம் தோய்ந்த நிலத்தில் கிடக்கையில், கோபம் நிறைந்த கூட்டம் சென்று விட்டது, அவர்களின் இரத்த வெறி தற்காலிகமாய்த் தணிந்திருந்தது, தாங்கள் மேற்கொள்ளும் செயலில் இருந்த இடர்ப்பாட்டை உணர்ந்த நிலையில் கிறிஸ்தவர்கள், அவ்விடத்திற்கு வந்து, முறிந்து போன அந்த உடலை மென்மையாக எடுத்து, அதை அடக்கம் செய்ய ஆயத்தம் பண்ணும்படி வீட்டுக்குச் சுமந்து சென்றனர். யூதர்களின் சட்ட முறைமைகள் குற்றவாளிகளின் சவங்களை அடக்கம் செய்ய அனுமதித்தாலும், அவர்களின் மரணத்திற்காகத் துக்கம் கொண்டாடுவதை அனுமதித்ததில்லை.[2] இவ்வளவு அபாயம் இருப்பினும், வீரமிக்க அம்மனிதர்கள் தங்கள் துக்கத்தை மறைக்க முயற்சி செய்யவில்லை; அவர்கள் சத்தமிட்டு அழுதனர்!*

*இவர்கள் வருத்தத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போது, சவுல் வெறியினால் மேற்கொள்ளப்பட்டிருந்தார்: "சவுல் வீடுகள்தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக் கொண்டுபோய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக்கொண்டிருந்தான்" (வ. 3). "பாழாக்கி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது மிருகங்கள் தங்கள் இரை விலங்குகளின் உடல்களை காட்டுத்தனமாகக் கிழிப்பதைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட வார்த்தையாகும். சவுல் - சபையை அழிப்பது என்ற - ஒரே நோக்கத்திற்காகக் காட்டு மிருகம் போலானார். ஆண்கள் அல்லது பெண்கள் எவரொருவரையும் அவர் தப்பவிடவில்லை. ஒருவேளை அவரும், அவரது உடன் வேலையாட்களும் கிறிஸ்தவர்களின் வீடுகளை உடைத்துப் புகுந்து, தாய்மார்கள் மற்றும் தகப்பன்மார்களின் கைகளைப் பின்புறம் கட்டி இழுத்து அவர்களைச் சிறையில் போட்டு, கண்ணீருடன் நின்ற குழந்தைகளைப் பின்விட்டிருக்கலாம். சிறையில் அவர்,*

*அவர்களை அடித்துத் துன்புறுத்தி, அவர்கள் தங்கள் விசுவாசத்தை மறுக்கும்படி செய்ய முயற்சி செய்தார். பின்நாளில் அவர் தமது வெறியைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்:*

> *நான் இந்த மார்க்கத்தாராகிய புருஷரையும் ஸ்திரீகளையும் கட்டி, சிறைச்சாலைகளில் ஒப்புவித்து, மரணபரியந்தம் துன்பப்படுத்தினேன் ... [இயேசுவினிடத்தில்] விசுவாசமா யிருக்கிறவர்களை நான் காவலில் வைத்து ஜெப ஆலயங்களில் அடித்ததையும் ... பரிசுத்தவான்களில் அநேகரைச் சிறைச்சாலை களில் அடைத்தேன்; அவர்கள் கொலை செய்யப்படுகையில் நானும் சம்மதித்திருந்தேன். சகல ஜெப ஆலயங்களிலும் அவர் களை அநேகந்தரம் தண்டித்து, தேவதூஷணஞ் சொல்லக்[3] கட்டாயப்படுத்தினேன் (22:4, 19; 26:10, 11).*

*அதிகாரம் 8ல், வசனம் 4, சிதறப்பட்டவர்களை நமக்கு முன்பாக மறுபடியும் கொண்டு வருகிறது. உங்கள் சிந்தையில் அவர்களை உருவகம் செய்யுங்கள். அவர்கள் தங்கள் முதுகு களில் சுமக்க முடிந்ததைத் தவிர-வீடுகளையும், ஆட்டு மந்தை மாட்டு மந்தைகளையும், உடைமைகள் யாவற்றையும் இழந்து போனவர்களாயிருந்தனர். புழுதி நிறைந்த பலஸ்தீனச் சாலை களில் அவர்கள் சிரமத்துடன் நடந்து செல்வதைப் பாருங்கள். அவர்களைக் கடந்து செல்பவர்களுக்கு ஒரு வியப்பான ஆர்வம் உண்டாயிருக்கும். மக்கள் அவர்களிடத்தில், "என்ன நடந்தது?" என்று கேட்டிருப்பார்கள். இந்தக் கிறிஸ்தவர்கள் அதற்கு என்ன விடையளித்திருப்பார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? ''நாங்கள் எல்லாவற்றையும் இழந்துவிட்டோம்'' என்றா? "இயேசுவைப் பின்பற்றுபவர்களாயிருப்பது எவ்வளவு கடின மானது என்று நாங்கள் கண்டறிந்தோம்" என்றா? "இன்னும் எவ்வளவு தூரம் நான் இப்படியிருக்க முடியுமென்று எனக்குத் தெரியவில்லை" என்றா? வசனம் 4 ஐக் கவனியுங்கள்: "சிதறிப் போனவர்கள் எங்குந் திரிந்து, சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித் தார்கள்.'' ''பிரசங்கித்தார்கள்'' என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது ''பிரசங்கித்தல்'' என்ற சாதாரண வார்த்தையாக இல்லாமல், ''நற்செய்திப் பணி செய்தல்" - நற்செய்தியைக் கூறுதல் என்பதற்குரிய வார்த்தையாக உள்ளது! உபத்திரவப் படுத்தப்பட்ட இக்கிறிஸ்தவர்கள், எங்கும் திரிந்து, "உலகம் எப்படியாகி விட்டது எனப் பாருங்கள்!" என்று கூறாமல், "உலகத்திற்கு வந்துள்ளவர் யார் என்று பாருங்கள்!"*

என்று கூறத் தொடங்கினார்கள்!

ஸ்தேவானின் முன்னுதாரணத்திலிருந்து இந்தக் கிறிஸ்தவர்கள் கற்றுக் கொண்டிருந்தனர்: அவர்களின் விரோதிகள் தங்கள் சரீரங்களை நசுக்க முடியுமே தவிர, தங்களின் ஆவியை அவர்கள் நசுக்க முடியாது; அவர்கள் தங்கள் உயிரை நிறுத்தலாமே தவிர, தங்கள் செல்வாக்கைத் தடுக்க முடியாது; அவர்கள் தங்கள் வீடுகளைப் பறித்துக் கொள்ளலாமே தவிர, தங்கள் குடும்பங்களைப் பறிக்க முடியாது (யோவா. 14:1-3); அவர்கள் தங்கள் ஆஸ்திகளைக் களவு செய்யலாமே தவிர, தங்கள் ஐசுவரியங்களைக் களவு செய்ய முடியாது (மத். 6:20).

## நெருப்புச் சுடர் வடக்கில் பரவுகிறது (8:5-25)

வசனங்கள் 1 முதல் 4 வரையுள்ள கருத்தானது பின்னால் அதிகாரம் 11ல் விரிவாக்கப்பட்டது: "ஸ்தேவான் நிமித்தமாய் எழும்பின உபத்திரவத்தினாலே சிதறப்பட்டவர்கள் சுவிசேஷ வசனத்தை யூதர்களுக்கேயன்றி மற்ற ஒருவருக்கும் அறிவியாமல் பெனிக்கே நாடு, சீப்புரு தீவு, அந்தியோகியா பட்டணம் வரைக்கும் சுற்றித் திரிந்தார்கள்" (11:19). ஆயினும், இக்கணத்தில், எருசலேமிலிருந்து சமீபத்திலிருந்த இடத்தில் சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொண்ட ஒரு குறிப்பிட்ட கிறிஸ்தவரையே லூக்கா இவ்விடத்தில் ஒருநிலைப்படுத்திக் கூறுகிறார்: "அப்பொழுது, பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான்" (8:5).

சமாரியர்களின் மனமாற்றம் பற்றி வசனம் 5 முதல் 25 வரையிலும் கூறப்படுகிறது. இது நடபடிகள் நூலில் மனமாற்றம் பற்றிய விபரங்கள் கூறப்படும் இரண்டாவது இடமாகும். அதிகாரம் 2ல், பெந்தெகொஸ்தே நாளன்று யூதர்கள் மன மாற்றம் பெற்ற விபரத்தைக் கண்டோம். அந்த நாள் தொடங்கி, மேற்சொன்ன நிகழ்ச்சி நடைபெற்ற வரையிலும் யூதர்கள் தவிர வேறு எவரும் மனமாற்றம் அடைந்திருக்கவில்லை - எனவே விரிவான விபரங்களுக்குப் பதிலாக, சுருக்கமான கூற்றுகளே தரப்பட்டிருந்தன:

*... இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் (2:47).*

*திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடமாக அதிகமதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள் (5:14).*

*... சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று; ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள் (6:7).*

ஆயினும், இப்பொழுது பகுதி - யூதரும், பகுதி - புறஜாதியாருமான சமாரியர்களிடத்தில் சுவிசேஷம் செல்லுகையில் நாம் மாபெரும் அடியெடுப்பொன்றை வைக்கின்றோம். மனமாற்றத்தின் "பாலம்" என்று நான் அழைக்கும் இந்நிலையில் நாம் உள்ளோம். நடபடிகள் நூலில் விரிவாய்க் கூறப்படும் மனமாற்ற நிகழ்ச்சி ஒவ்வொன்றும் சுவிசேஷத்தைப் பரப்பும் புதிய சாத்தியக் கூறுகளுக்கு வழி நடத்துகின்ற - மனமாற்றத்தின் "பாலமாகவே" உள்ளன.

இந்த அடிவைப்பின் குறிப்பிடத்தக்க நிலையை நாம் மதிக்க வேண்டுமென்றால், சமாரியர்களைப் பற்றியும், யூதர்களுடன் அவர்களுக்கிருந்த உறவு முறைகளைப் பற்றியும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் நாட்களில், பலஸ்தீனத்தின் மையப்பகுதியாகிய சமாரியா என்ற மாநிலத்தில் சமாரியர்கள் வாழ்ந்தனர், இது கலிலேயா மற்றும் யூதேயா மாநிலங்களின் மத்தியில் இருந்தது. யூதர்கள் சிறைப் பிடிக்கப்பட்டதன் விளைவாக சமாரியர் என்ற இனம் உண்டாயிற்று. ஆயிரக்கணக்கான யூதர்கள் சிறைப்பிடிக்கப் பட்டு, கொண்டு போகப்படுகையில் சிலர் மட்டும் பலஸ்தீனத் திலேயே இருந்தனர். மற்ற நாடுகளிலிருந்து மக்கள் பலஸ்தீனத் தில் குடியேற்றப்பட்டனர். இப்புறஜாதியார்கள் யூதர்களுடன் கலப்புத் திருமணம் செய்து கொண்டனர். இதன் விளைவாக - பகுதி யூதரும், பகுதி புறஜாதியுமான, பகுதி தேவனை தொழுது கொள்கிறவர்களும், பகுதி விக்கிரகாராதனைக்காரருமான[4] - சமாரியர்கள் என்று அழைக்கப்பட்ட இனம் உண்டாயிற்று, சிறைப்பிடிக்கப்பட்டுச் சென்றிருந்த யூதர்கள் பலஸ்தீனத் திற்குத் திரும்ப வந்தபோது, அவர்கள் தங்கள் இனத்தையும், மார்க்கத்தையும் சுத்தமாகக் காத்துக்கொண்டது பற்றிப் பெருமை பாராட்டிக் கொண்டனர் - அவர்கள் சமாரியர்களைத்

தாழ்வாகக் கண்ணோக்கினர். மறுகட்டுமானத்தில் அவர்கள் சமாரியருடைய உதவியை மறுத்தனர், இதன் விளைவாக இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் காலத்திலும் கூட அவர்கள் இரு சாராருக்குமிடையில் பெரும் பிளவு ஏற்பட்டிருந்தது. யூதரும் சமாரியரும் ஒருவரையொருவர் வெறுத்தனர். இயேசுவும், சமாரியப் பெண்ணும் என்ற நிகழ்ச்சியில்கூட, "யூதர்கள் சமாரியருடனே சம்பந்தங்கலவாத படியினால்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது (யோவா. 4:9) - இதன் மாற்றுக்கூறும் கூட உண்மையானதாகவே இருந்தது. சமாரியர்களிடம் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்வதற்குப் பெரிய அளவிலான மனரீதியான மற்றும் உணர்வு ரீதியான தடைகளை வெற்றி கொள்ள வேண்டியதாயிருந்தது.

சமாரியர்களுக்கு நற்செய்தியை எடுத்துச்செல்ல தேவன் பிலிப்பு என்ற மனிதரைப் பயன்படுத்தினார். இவர் அப்போஸ்தலராகிய பிலிப்பு அல்ல (1:13), ஆனால் அதிகாரம் 6ல் பந்தி விசாரணைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு பேரில் ஒருவராக நாம் சந்தித்த பிலிப்பு ஆவார். அப்போஸ்தலர்களால் நியமிக்கப்பட்ட தகுதிகள் இவருக்கு இருந்ததால், இவர் "நற்சாட்சியும்" "பரிசுத்த ஆவியும்[5] ஞானமும் நிறைந்தவராயும்" இருந்தார் என்று நாம் அறிகிறோம் (6:3). இவர் - பலஸ்தீனத்திற்கு வெளியே பிறந்து - யூத மார்க்கத்தமைந்தவராய் இருந்தார், இவ்விதமாய் அவர் பலஸ்தீனிய யூதர்களைப் போல சமாரியர்கள் மீது பலமான தப்பெண்ணம் எதுவுமற்றவராயிருந்தார்.

"அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான்" (8:5). பிலிப்பு சென்ற பட்டணம் எது என்று நமக்கு உறுதியாய்த் தெரியவில்லை. "சமாரியாவிலுள்ள ஒரு பட்டணம்'' என்பது ''சமாரியா என்ற பெயருள்ள பட்டணமாகவோ" அல்லது "சமாரியாவின் முக்கிய பட்டணமாகவோ" இருக்கலாம் என்று பல கல்வியாளர்கள் உறுதியாய் கூறுகின்றனர். எனவே இது சமாரியா என்று மூலப் பெயர் பெற்ற பழைய தலைநகரான செபஸ்தே என்ற பட்டணமாயிருக்கலாம். மற்றவர்கள், பிலிப்பு வேறொரு பட்டணமான - ஒருவேளை இது கிணற்றண்டையில் ஒரு பெண்ணை இயேசு சந்தித்த ஊரான - சீகார் ஆக இருக்கலாம் (யோவா. 4:4) என்று நம்புகின்றனர். சீகாரில் இயேசுவுக்குக் கிடைத்த வரவேற்

பானது அவர், சமாரியர்களை, அறுவடைக்குத் தயாரான நிலையில் இருந்த வயல்வெளிக்கு ஒப்பிட்டுப் பேசும்படி தூண்டியிருந்தது (யோவா. 4:35). ஒருவேளை, தேவனுடைய தயவினால், பிலிப்பு அந்த அறுவடையை மேற்கொள்ளும்படி அங்கு வந்திருக்கலாம்.

ஸ்தேவானுக்குப் போலவே பிலிப்புவுக்கும் அப்போஸ தலர்கள் தங்கள் கைகளை வைத்து ஜெபித்திருந்தபடியால், அவர் அற்புதங்களைச் செய்ய முடிந்தது (6:8). இந்த அற்புதங்கள் அவரது உரையைக் கேட்பதற்குத் தயாரான ஒரு கூட்டத்தையும், அவர் மீது முழு நம்பிக்கையையும்[6] பெற்றுத் தந்தது. நாம் பின்வருமாறு படிக்கின்றோம்:

> *பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டுக் கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள். அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேகந் திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப் பட்டார்கள்.[7] அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று (வ. 6-8).*

ஆயினும் அந்தப் பட்டணத்திலிருந்த ஒவ்வொருவரும் மகிழ்ச்சி யடையவில்லை, பிலிப்பு அங்கு வந்து சேரும் வரை மக்களின் கவனத்தை வேறொரு மனிதன் ஈர்த்திருந்தான்:

> *சீமோன் என்று பேர்கொண்ட ஒரு மனுஷன் அந்தப் பட்டணத்திலே மாய வித்தைக்காரனாயிருந்து, தன்னை ஒரு பெரியவனென்று சொல்லி, சமாரியா நாட்டு ஜனங்களைப் பிரமிக்கப்பண்ணிக்கொண்டிருந்தான். தேவனுடைய பெரிதான சக்தி இவன்தான் என்று எண்ணி; சிறியோர் பெரியோர் யாவரும் அவனுக்குச் செவி கொடுத்துவந்தார்கள். அவன் அநேக காலமாய்த் தன்னுடைய மாய வித்தைகளி னாலே அவர்களைப் பிரமிக்கப்பண்ணினதினால் அவனை மதித்து வந்தார்கள் (வ. 9-11).*

சீமோன் எவ்விதம் சமாரியர்களை வஞ்சித்துக் கொண்டிருந் தான் என்று நாம் படிக்கும்போது, அது எப்படி முடிந்திருக்கும் என்று நாம் வியப்படையலாம். யூதர்களைப் போலவே சமாரியர்களும் தேவனைத் தொழுதனர். பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து நூல்களே சமாரியர்களின் வேதாகமமாகும் - அது மந்திரவாத வித்தைகளைப் பலமாக எதிர்த்துப் பேசிற்று (யாத்.

*22:18; உபா. 18:10-12ஐக் காணவும்). யேகோவா தேவன் மேலுள்ள விசுவாசத்துடன், சீமோன் மேலும் அவர்கள் எப்படி விசுவாசமாயிருந்திருக்க முடியும்? என்று நாம் வியப்படைய லாம். பிறகு நாம் நம்மைச் சுற்றியுள்ள உலகத்தை நோக்கி நமது பார்வையைத் திருப்புகிறோம், இப்போது அது புரிந்துகொள்ள கடினமாயிருப்பதில்லை. அமெரிக்காவில் உள்ள ஜனத்தொகை யில் 90 சதவிகிதத்திற்கு மேற்பட்டோர் தேவனை விசுவாசிப் பதாகக் கூறிக் கொள்கின்றனர் - ஆனாலும் மூட நம்பிக்கைகள் நிறைந்துள்ளன. ஏறக்குறைய ஒவ்வொரு செய்தித்தாளிலும் ஜோதிடத்திற்கென்று தனிப்பகுதி உள்ளது. ''மனவியல்'' ஆலோசகர்கள் ஒவ்வொரு ஆண்டும் கோடிக்கணக்கான ரூபாய்களை ஈட்டுகின்றனர். "புதிய யுகம்" பற்றிய விளம்பர மானது நாட்டில் பெருக்கெடுத்தோடுகின்றது. ஒருமுறை சர்க்கஸில் வல்லுநரான P.T. பர்நம் அவர்கள், "ஒவ்வொரு நிமிடமும் ஒரு (மனிதரை) உறிஞ்சுபவன் பிறக்கின்றான்" என்று கூறினார். உலகத்தில் அதன் சீமோன்கள் எப்பொழுதுமே இருப்பார்கள் - எப்பொழுதுமே அவர்களை நம்பத் தயாராக உள்ள ஏமாளி மக்களும் இருப்பார்கள்!*

*உண்மையான அற்புதங்களைச் செய்ய பிலிப்பு வந்தபோது, சீமோனின் கற்பனை அற்புதங்கள் ஒன்றுமற்றவையாகக் காணப்பட்டன.[8] ''தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்" (வ. 12). யூதர்களைப் போலவே (2:38), சமாரியர்களும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற வேண்டியிருந்தது.*

*பிலிப்புவின் பிரசங்கமானது சீமோனிடம் ஏற்படுத்திய விளைவை வரைபடமாகக் காண முடிகிறது: "அப்பொழுது சீமோனும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று, பிலிப்பைப் பற்றிக்கொண்டு, அவனால் நடந்த அடையாளங்களையும் பெரிய அற்புதங்களையும் கண்டு பிரமித்தான்" (வ. 13). சிலர் சீமோனின் மனமாற்றத்தைக் குறித்து, முதலாவது அவன் இரட்சிக்கப்பட்டானா என்ற சந்தேகத்தை எழுப்பி, அறை கூவல் விடுக்கின்றனர். ஆயினும், மற்ற சமாரியர்களின் அதே நோக்கங்களுடனேயே, அவர்கள் செய்த அதே செயல்களைச் சீமோனும் செய்தான் என்றே லூக்கா கூறுகிறார்.*

*சீமோன் உட்பட, சமாரியர்களுக்கு இரட்சிப்பு உண்டா யிருந்தது! ஆயினும், பிலிப்புவின் செயல்கள் தேவனுடைய அங்கீகாரத்தைப் பெற்றிருந்தன என்பதை யூதர்கள் மற்றும் சமாரியர்கள் ஆகிய இரு சாராரும் புரிந்து கொண்டனர் என்பது முக்கியமாயிருந்தது - மற்றும், சமாரிய கிறிஸ்தவர்கள் யூத கிறிஸ்தவர்களுடன் சரிசமமாகவே நிலை நின்றனர். ஆக, நாம், "சமாரியர் தேவ வசனத்தை ஏற்றுக்கொண்டதை எருசலேமி லுள்ள அப்போஸ்தலர் கேள்விப்பட்டு, பேதுருவையும், யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள்" என்று படிக்கின்றோம் (வ. 14). அப்போஸ்தலர்கள் எருசலேமில் வாழ்வா சாவா என்ற போராட்டத்தில் இருந்தனர், ஆனால் அவர்களுக்கு வடக்கில் நடந்தவற்றின் முக்கியத்துவத்தை அவர்கள் உணர்ந்தனர். இவ்விதம் அவர்கள் தங்களில் இருந்த மிகச் சிறந்த இரண்டு மனிதர்களான பேதுருவையும் யோவானையும் அங்கு அனுப்பினர்.*

*அப்போஸ்தலர்கள் மிகவும் சரியாக இந்தப் பிரதிநிதிகளை ஏன் அனுப்பினார்கள்? அங்கு நடைபெற்ற ஊழியமானது தேவனால் அங்கீகரிக்கப்பட்டது என்று நிச்சயம் செய்வதற்காக ஆய்வு செய்யவா? அப்படியென்றால் அவர்கள் அங்கு கண்டது தேவனுடைய "அங்கீகார முத்திரையை" அவ்வூழியத்திற்குத் தரும்படி அவர்களைத் தூண்டிற்று:*

> *...பேதுருவையும் யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள். இவர்கள் வந்தபொழுது அவர்களில் ஒருவனும் பரிசுத்தஆவியைப் பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்றிருந்தவர்களாகக் கண்டு, அவர்கள் பரிசுத்தஆவியைப் பெற்றுக் கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள், அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள் (வ. 14ஆ-17).*

*வசனம் 15 முதலில் வினோதமாகக் காணப்படுகிறது: "இவர்கள் வந்தபொழுது அவர்களில் ஒருவனும் பரிசுத்தஆவியைப் பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ் நானத்தை மாத்திரம் பெற்றவர்களாகக் கண்டு." "தேவன் பட்சபாதம் காட்டுகிறவரல்ல" என்பதால், இயேசுவின் நாமத்தி னாலே சமாரியர்கள் ஞானஸ்நானம் பெற்றபொழுது, நிச்சய மாக அவர்கள், யூதர்கள் பெற்ற அதே ஆசீர்வாதத்தைப்*

பெற்றிருக்க வேண்டும், அதில் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவதும் அடங்கியது (2:38; 5:32).[9] பின்பு ஏன் லூக்கா, "அவர்களில் ஒருவனும் பரிசுத்த ஆவியைப் பெறாமல்" என்று கூற வேண்டும்? தனிநபர்கள் பரிசுத்தஆவியைப் "பெறுதல்" என்ற சொற்றொடரானது (ஒருவர் வசனரீதியான ஞானஸ்நானம் பெறும்போது) தமக்குள் வாசம் பண்ணக்கூடிய அளவில் பரிசுத்தஆவியைப் பெற்றுக் கொள்வதற்கு சாதாரணமாகப் பயன்படுத்தப்படுவதில்லை; மாறாக தனிநபர்கள் அற்புதங்கள் செய்யும்படியாக அவர்கள்மேல் பரிசுத்த ஆவியானவர் வருவதைக் குறிக்கவே இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்டது (இ.வ. 10:44; 11:15). பேதுருவும் யோவானும் அங்கு வரும் வரையில் சமாரியர்களில் ஒருவரும் அற்புதங்கள் செய்யும் வரங்களைப் பெற்றிருக்கவில்லையென்று லூக்கா கூறினார். வசனம் 18ன் மொழிநடையில் அற்புத வரங்கள் செய்யும் வல்லமை பொழியப்படுதல் வலியுறுத்தப்படுகிறது: "... பரிசுத்த ஆவி தந்தருளப்படுகிறதைச் சீமோன் கண்டபோது ..." தமக்குள் வாசம் பண்ணுகிற அளவுக்கு ஒருவர் பரிசுத்தஆவியைப் பெறும்பொழுது அது கண்ணால் காணக்கூடிய அற்புத வரங்களைக் கொண்டிருப்பதில்லை; ஆனால் அற்புத வரங்கள் செய்யும் வல்லமை பொழியப்படும்போது அவைகளை மற்றவர்கள் காண முடிந்திருந்தது.

முன்னதாக ஸ்தேவான் மீதும் பிலிப்பு மீதும் அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை வைத்து (6:6) அற்புத வரங்களை அவர்களுக்குக் கொடுத்திருந்தனர் (6:8; 8:6-8). இப்பொழுது பேதுருவும் யோவானும் தங்கள் கைகளை சமாரியர்கள் மீது வைத்தனர்: "பேதுருவும், யோவானும் ... அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம் பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள், அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள்" (8:14, 15, 17).

அப்போஸ்தலர்கள் தம்மீது கைகளை வைத்தபோது பெற்ற விசேஷ வரங்களைப் பிலிப்பு மற்றவர்களுக்குத் தர முடியாமல் இருந்தது என்ற கருத்து இங்கு மறைமுகமாக இருப்பதைக் கவனியுங்கள். மாறாக, இவ்வரங்களைத் தருவதற்கு அவர்கள் மீது கைகளை வைக்க அப்போஸ்தலர்கள் வரவேண்டியதாய் இருந்தது. "அப்போஸ்தலர் தங்கள் கைகளை அவர்கள்மேல் வைத்ததினால் பரிசுத்தஆவி தந்தருளப்படுகிறதை" என்று

வசனம் 18 வலியுறுத்துகின்றது. அப்போஸ்தலர்களும், அவர்கள் கைகளை வைத்தவர்களும் மரித்தபோது இந்த அற்புத வரங்கள் யாவும் முடிந்து (ஒழிந்து) போயின.

அற்புத வரங்களை சமாரியர்கள் மீது பொழியும்படி பேதுருவும் யோவானும் வந்தபொழுது, அவ்விருவருக்கும் குறைந்த பட்சம் இரண்டு நோக்கங்கள் இருந்திருக்க வேண்டும். முதலாவதாக, அவர்களின் செயல்பாடானது - அப்போஸ்தலர்களைப் போலவே - சமாரியர்களையும் தேவன் தமது சபையின் அங்கமாக ஏற்றுக் கொண்டிருந்தார் என்பதைக் காட்டியது. இரண்டாவது, இந்த வரங்களை சமாரியர்களுக்குத் தரும்போது, பேதுரு, யோவான் மற்றும் பிலிப்பு ஆகியோர் அங்கிருந்து சென்ற பின்னர், சமாரியர்கள் தாங்களாகவே செயல்பட முடியும். தேவனுடைய திட்டங்களின்படி, பிலிப்பு விரைவில் அங்கிருந்து செல்லவேண்டியதாய் இருந்தது (8:26).

வசனம் 18ல் நாம் மறுபடியும் சீமோனின் வீரகாவியத் திற்குத் திரும்புகிறோம். பேதுருவும் யோவானும் அற்புத வரங்களைத் தருவதை அவன் பார்த்தபோது, அவன் அந்த முக்கியத்துவத்தைப் பெற விரும்பினான்:

> அப்போஸ்தலர் தங்கள் கைகளை[10] அவர்கள்மேல் வைத்த தினால் பரிசுத்தஆவி தந்தருளப்படுகிறதைச் சீமோன் கண்ட போது, அவர்களிடத்தில் பணத்தைக் கொண்டுவந்து: "நான் எவன்மேல் என் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்த ஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தை கொடுக்க வேண்டும்" என்றான் (வ. 18, 19).

சீமோன் இந்த வரத்தை விரும்பியது ஏன்? சீமோன் இந்த வேண்டுகோளைப் பேதுரு மற்றும் யோவானிடம் கேட்டது பெருந்தவறு என்று நாம் யாவரும் உறுதியாய்க் கூற முடியும்.

> பேதுரு அவனை நோக்கி: "தேவனுடைய வரத்தைப்[11] பணத்தினாலே சம்பாதித்துக் கொள்ளலாமென்று நீ நினைத்த படியால் உன் பணம் உன்னோடேகூட நாசமாய்ப் போகக் கடவது. உன் இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையா யிராதபடியால் இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை. ஆகையால் நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம். நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறேன்" என்றான் (வ. 20-23).[12]

பேதுருவின் இந்தக் கடினமான வார்த்தைகளைப் பார்க்கும் சில எழுத்தாளர்கள், "சீமோன் மனந்திரும்பவே இல்லை என்று நான் உங்களுக்குக் கூறவில்லையா?" என்கின்றனர். சீமோன் கிறிஸ்தவராகவே இல்லையென்று பேதுருவின் வார்த்தைகள் நிரூபிப்பதில்லை. மாறாக ஒவ்வொரு புதிய கிறிஸ்தவரும் உணர வேண்டிய மூன்று முக்கியமான சத்தியங்களை அவை வலியுறுத்துகின்றன: (1) நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருந்த போதிலும் பாவத்திற்கு மறுபடியும் திரும்பக்கூடும் (யாக். 5:19, 20). (2) கிறிஸ்தவரான பிறகும், நமது மாம்சத்தில் அதே பலவீனங்கள் இன்னும் நமக்குள் இருக்கின்றன. "மாபெரும் பரிசுத்தவான்" என்ற நிலையை நெருங்கின பவுலும் கூட நான் அறிந்த ஒவ்வொருவரைப் போலவே, மாம்சத்தின் சோதனைகளோடு இன்னமும் போராடிக் கொண்டிருந்தார் (ரோமர் 7), மற்றும் அவர் தமது சரீரத்தைக் கீழ்ப்படியப் பண்ணுவதற்காகத் "தமது சரீரத்துடன் போராடிக்" கொண்டிருந்தார் (1 கொரி. 9:27). தேவன் நமது பலவீனங்களை நீக்குவதில்லை, ஆனால் அவைகளைப் போராடி மேற்கொள்வதற்கு நமக்குப் பலத்தைக் கொடுக்கிறார். புதிய கிறிஸ்தவர்களே, நீங்கள் இன்னும் பலவீனங்களுள்ளவர்களாயிருப்பதால், சோதனைக்குள்ளாக்கும் சூழ்நிலைகளிலிருந்து விலகியிருங்கள் (1 கொரி. 10:12)! (3) கிறிஸ்தவர்களாயிருக்கையில் நாம் பெரும் பாவங்கள் செய்தபோதிலும், மறுபடியும் நம்மால் தேவனிடத்திற்குத் திரும்ப முடியும்!

பேதுரு, சீமோனிடம், "ஆகையால் நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம்'' என்று கூறினர் (வ. 22). ''ஒருவேளை'' என்ற வார்த்தைகள் தேவனுடைய மன்னிக்கும் பலத்தைக் குறிப்பிடாமல், சீமோனின் மனந்திரும்பும் பலத்தைக் குறிக்கின்றன. இவைகள் சீமோனை தன்னம்பிக்கையிழந்து போவதற்கல்ல மாறாக உற்சாகப்படுத்தவே கூறப்பட்டன (இ.வ. யோவே. 2:12-14). "உங்களால் மனந்திரும்ப முடியுமென்றால், ஒரு கசப்பான இருதயம், இனிமையானதாய் ஆக முடியும்! உங்களால் மனந்திரும்ப முடியுமென்றால், பாவத்தின் விலங்குகள் மறுபடியும் உங்களை விட்டு விழுந்து போக முடியும்!"

பேதுருவின் வார்த்தைகளுக்கு, சீமோனை அதிர்ச்சிக்

குள்ளாக்கி, அவனது நிலை எவ்வளவு நம்பிக்கையற்றதாய் இருந்தது என்பதை அவனை உணரச் செய்ய வேண்டும் என்ற நோக்கம் இருந்திருந்தால், அது உண்மையில் விரும்பத்தக்கவை கள்தான். அதற்குச் சீமோன்: "நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு, எனக்காகக் கர்த்தரை வேண்டிக் கொள்ளுங்கள்'' என்றான் (வ. 24). சீமோனை விமர்சனம் செய்பவர்கள், மீண்டும் ஒருமுறை அவனது செயல் பாடுகள்பற்றி மிக மோசமான வகையில் கதை கட்டுகிறார்கள். "சீமோன் தானே ஜெபிப்பதற்குப் பதில், பேதுருவையும் யோவானையும் தனக்காக ஜெபிக்கும்படிக் கேட்டான்" என்று அவர்கள் முடிவு செய்கின்றனர். சீமோன் மனந்திரும்பி ஜெபிக்கத் தவறி விட்டான் என்று லூக்கா கூறவில்லை. மாறாக சீமோனின் மனக் கலக்கமானது அவனைத் தனது சொந்த ஜெபத்துடன்கூட அப்போஸ்தலர்களும் அவனுக்காக ஜெபிக்க வேண்டும் என்று கதறுமளவுக்குப் பெரியதாயிருந்தது என்று அவர் வலியுறுத்தினார். நமது சக கிறிஸ்தவர்களை நமக்காக ஜெபிக்கும்படிக் கேட்டுக் கொள்வது தவறல்ல (யாக். 5:16).[13] சீமோனின் கவலை உண்மையானது மற்றும் ஆவியானவரால் ஏவப்பட்டதென்று எண்ணவே நான் முற்படுகின்றேன் - சீமோனை நாம் காணும் கடைசிக் காட்சியானது, முன்னாள் மந்திரவாதி ஒருவன் மனந்திரும்பி முழந்தாள் படியிடுவதாகவே இருக்கிறது.

பேதுருவும் யோவானும் மேலும் சில நாட்கள் அப்புதிய கிறிஸ்தவர்களுடன் இருந்துவிட்டு, தங்கள் வீடு திரும்பினார் கள்: ''இவ்விதமாய் அவர்கள் கர்த்தருடைய வசனத்தைச் சாட்சியாய் அறிவித்துச் சொன்ன பின்பு, சமாரியருடைய அநேக கிராமங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, எருசலே முக்குத் திரும்பி வந்தார்கள்'' (வ. 25).[14] யூதேயாவிலும் சமாரியாவிலும் அப்போஸ்தலர்கள் தமக்குச் சாட்சிகளா யிருப்பார்கள் என்று இயேசு கூறியிருந்தார், கடைசியாக இந்த வார்த்தைகள் உண்மையாயிற்று. சமாரியர்களின் பட்டணத்தில் பிலிப்பு தொடங்கி வைத்த இந்நெருப்பு அம்மாகாண முழுவதும் பரவிற்று.

# நெருப்புச் சுடர் தெற்கில் பரவுகின்றது (8:26-40)

*சுவிசேஷ நெருப்புச் சுடரானது எருசலேமின் வடக்குப் பகுதியில் மட்டும் பரவாமல், அது தெற்குப் பகுதியிலும் பரவியது. வசனங்கள் 26 முதல் 40 வரையிலும் நாம் ராஜ ஸ்திரீயின் பொக்கிஷதாரருடைய மனமாற்றத்தைக் காண்கின் றோம், அவர் நற்செய்தியை எத்தியோப்பியாவுக்குக் கொண்டு சென்றார். இன்னொரு பாடத்தில் நாம் விரிவாகப் படிக்கப் போகும் இந்த மனமாற்றமும் ஒரு மனமாற்றப் "பாலமே" ஆகும். இந்த மந்திரி, அநேகமாக யூதராக மாறிய புறஜாதி யாராயிருக்க வேண்டும்; வேறு வார்த்தைகளில் சொல்வ தானால், யூதர்களுக்குப் பிரசங்கிப்பதற்கும், புறஜாதிகளுக்குப்[15] பிரசங்கிப்பதற்கும் இடையில் இன்னொரு பாலமாக இருந்த - யூத மார்க்கத்தமைந்தவராவார். இவர் தமது மனமாற்றத்திற்குப் பிறகு, இரட்சிப்பின் வரலாற்றைத் தம்முடன் எடுத்துக் கொண்டு[16] தமது வீடு இருந்த ஆப்பிரிக்க நாட்டுக்குச் சென்றார். இயேசுவின் செய்தியானது எல்லா திசைகளிலும் பரவிக் கொண்டிருந்தது!*

## முடிவுரை

*இந்நாட்களில், சில பிராந்திய சபைகள் "வாடகை-துப் பாக்கி" என்ற மனநிலையில் உபத்திரவமடைந்து கொண்டுள் ளன: பழைய நாட்களில் மேற்குப் பகுதிகளில், "கெட்ட நபர்களை"த் தாங்களாகவே சமாளிக்க முடியாத சில நகரங்களில் உள்ளவர்கள் துப்பாக்கி வீரர்களை வாடகைக்கு அமர்த்தி, அவர்கள் வந்து நகரத்தின் ஒழுக்கத்தைக் காக்கும்படி செய்ததுண்டு. அதுபோலவே, சில பிராந்திய சபைகள், தாங்கள் வளருவதற்குப் போதுமான துப்பாக்கிகள் (அதாவது முழு நேர ஊதியம் பெறும் ஊழியர்கள்) அமர்த்தப்பட வேண்டும் என்று எண்ணுகின்றனர். "சரியான நபர்கள் மட்டும் நமக்குக் கிடைத்து விட்டால், எல்லாப் பிரச்சனைகளும் சரியாகிவிடும்"[17] என்று அவர்கள் எண்ணுகின்றனர். சிதறப்பட்டுப் போனவர்களில் "முழு நேர ஊழியர்கள்" (அப்போஸ்தலர்கள்)[18] யாரும் இல்லை என்று லூக்கா தெளிவாக்குகின்றார். அத்துடன் மிகச்*

*சாதாரணமான இந்த "சாதாரண" உறுப்பினர்களே "எங்கும் திரிந்து வசனத்தைப் பிரசங்கித்தார்கள்"[19] என்றும் அவர் தெளிவாக்குகின்றார். பையன்கள், சிறுபெண்கள், ஆண்கள் பெண்மணிகள் - யாரெல்லாம் கிறிஸ்தவர்களோ அவர்கள் யாவரும் மற்றவர்களுடன் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொண்டார்கள்! "சபை வளர்ச்சியின் இரகசியத்தைப் பற்றி" இதைவிட சிறந்து விளங்கும் கூற்று எதையும் நடபடிகள் நூலில் நீங்கள் காண முடியாது!*

*ஒவ்வொரு கிறிஸ்தவரும் - அமெரிக்காவிலும் வெளிநாடு களிலும் உள்ள எல்லா கிறிஸ்தவர்களும் - கர்த்தரால் நிரப்பப் பட்டுத் தாம் சந்திக்கின்ற யாவரிடத்திலும் சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ளும் நாளுக்காக நான் ஆவலுடன் ஏங்கி நிற்கிறேன்! அப்பொழுது மீண்டும் ஒருமுறை சுவிசேஷச் சுடரானது உலக முழுவதும் வலம் வரும்!*

---

குறிப்புகள்

*[1]உபத்திரவங்கள் பெரும்பாலும் - ஸ்தேவான் போன்ற - யூத மார்க்கத் தமைந்தவர்(யூதர்)களையே குறி வைத்துச் செய்யப்பட்டன என்று பல விளக்க வுரையாளர்கள் எண்ணுகின்றனர். இவ்விதமாக அப்போஸ்தலர்கள் (மற்றும் சொந்த நாட்டு யூதக் கிறிஸ்தவர்கள் ஆகியோர்) சவுல் மற்றும் அவரது துணையாளர்களால் தனித்து விடப்பட்டனர். இக்கருத்தைக் கொண்டிருப்பவர்கள், சில கிறிஸ்தவர்கள் எருசலேமில் தங்கியிருந்தனர் (8:2; 9:26; 11:2, 22) என்றும், அவர்கள் சொந்த நாட்டு யூதக் கிறிஸ்தவர்கள் என்றும் கருதுகின்றனர். இன்னும், நகரிலிருந்து ஒவ்வொரு கிறிஸ்தவரையும் துரத்துவது என்பது முடியாத செயலாயிருந்திருக்க வேண்டும், மற்றும் சிலர் சவுலின் மனமாற்றத்திற்குப் பின்னர் எருசலேமுக்குள் மீண்டும் திரும்ப வந்திருக்கலாம். மற்றும், எருசலேமிலிருந்த சபையில் பின்னாளில் பர்னபாவும் இருந்தார் (11:22), இந்த பர்னபா சீப்புரு தீவைச் சேர்ந்தவராவார் (அதாவது, அவர் அநேகமாக யூத மார்க்கத்தமைந்தவராயிருக்க வேண்டும்) (4:36). 8:1ல் "யாவரும்" என்பதை "எருசலேமிலிருந்த அநேக யூதமார்க்கத்தமைந்த கிறிஸ்தவர்களும்" என்பதைக் காட்டிலும் "எருசலேமிலிருந்த அநேக கிறிஸ்தவர்களும்" என்று எண்ணுவதே சிறந்ததாகக் காணப்படுகிறது. [2]இச்சட்டமானது, தனது மகன்கள் இறந்தபோது ஆரோனின் மேல் விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டின் (லேவி. 10:6; எரே. 22:19லும் காண்க) எதிரொலியாக இருக்கலாம். [3]இது அவர் அவர்களை இயேசுவே கர்த்தர் என்று அறிக்கையிடப்பண்ணி, அவ்வறிக்கையானது அந்நாட்களில் அவரது பார்வையில் மரணத்துக்கேதுவான தேவதூஷணமாயிருந்தது என்று கூறியிருக்கலாம் - அல்லது அவர் அவர்கள் யாவரையும் இயேசுவை மறுதலிக்கச் செய்திருக்கலாம், இது அவர் இக்கூற்றைக் கூறும் நாட்களில் (அப். 26ல்) அவருக்குத் தேவதூஷணமாயிருந்தது. பிந்தியதே இங்கு அநேகமாகப் பொருள்படுகிறது. [4]இறையியல் கொள்கைகளில் சமாரியர்கள் யூதர்களை (விசேஷமாக சதுசேயர் களை) விட்டு வெகுதொலைவு சென்று விடவில்லை, ஆனால் மந்திரவாதி*

சீமோனை அவர்கள் ஏற்றுக்கொண்ட செயலானது, நடைமுறைப் பேச்சுப்படி, அவர்கள் தங்கள் முன்னோர்களின் அந்நிய தெய்வங்களை விட்டும் வெகு தொலைவு சென்று விடவில்லை என்று காட்டுகின்றது. [5]வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், (அப்போஸ்தலர்களால் கொடுக்கப்பட்ட) ஆவியானவரின் உபதேசத்திற்கு அவர் கீழ்ப்படிந்திருந்தார். எனவே அவரது வாழ்க்கை ஆவியான வரின் கட்டுப்பாட்டின் கீழேயே இருந்தது. இவ்விதமாக அவரது வாழ்க்கை "ஆவியின் கனிகளை" உண்டாக்கியிருந்தது (கலா. 5:22, 23). [6]அற்புதங்களின் நோக்கங்களுக்கு மாற். 16:20; எபி. 2:3, 4 ஆகிய வசனங்களைக் காணவும். பிலிப்பு அற்புதங்களை முதலில் செய்து பிரசங்கத்தைப் பிறகு செய்தார் என்பதைக் கவனிக்கவும். இன்றைய நாட்களில் "குணப்படுத்தும் ஊழியம்" என்று அழைக்கப்படும் கூட்டங்களில், முதலில் கூடியிருப்பவர்களின் உணர்வுகளைக் கிளர்ச்சியுறச் செய்யும் வகையில் பிரசங்கம் செய்து, வரப்போகும் "அற்புதங் களுக்கு" அவர்களை தயார் செய்கின்றனர். [7]ஏவுதல் பெற்ற மருத்துவரான லூக்கா அசுத்த ஆவிகள் பிடித்தலையும், சரீர சுகவீனத்தையும் வேறுபடுத்திக் காட்டுவதைக் கவனியுங்கள். [8]சீமோனின் மந்திரவாதச் செயல்களுக்கும், பிலிப்புவின் அற்புதங் களுக்கும் அநேக மாறுபாடுகள் இருந்தன. அவற்றில், பிலிப்பு செய்தவை நடைமுறையில் இயல்பானவைகளாகும்: அவர் மக்களைக் குணப்படுத்தி, அவர்களை மகிழ்வடையச் செய்தார். சீமோன், மக்களை ஏமாற்றி அவர்களைப் பயமடையச் செய்தான். மற்ற மாறுபாடுகளை "மந்திரவாதியின் மனமாற்றம்" என்ற பிரசங்கத்தில் காணவும். [9]தேவன் வேண்டுமென்றே அற்புதங்களற்ற "பரிசுத்த ஆவியின் வரத்தை" மட்டும் சமாரியர்களுக்குக் கொடுத்திருந்தார் என்றும், பேதுருவும் யோவானும் விசேஷப் பயணமாக சமாரியாவுக்குச் சென்று பரிசுத்த ஆவியானவரின் இந்த "சாதாரண வரத்தை" ஒரு விசேஷ நிகழ்ச்சியில் வைத்துத் தந்தனர் என்றும் - அதன் மூலம் சமாரியர்களும் தேவனால் அங்கீகரிக்கப்பட்டனர் என்று காட்டுவதற்காகவே இவ்விதம் நடந்தது என்றும் ஒரு யூகம் செய்யப் பட்டுள்ளது. சமாரியர்கள் தேவனால் அங்கீகரிக்கப்பட்டதைக் காண்பிக்கப் பேதுருவும் யோவானும் விரும்பினார்கள் என்று நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால், (1) ஞானஸ்நானம் பெற்றுக் கொண்ட எவரிடமிருந்தும் இப்படிப்பட்ட முக்கியமான வரங்களை தேவன் விலக்கி வைத்திருப்பார் என்பது கற்பனை செய்ய முடியாததாகும். "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" (ரோமர் 8:9). பேதுருவும் யோவானும் அங்கு வரும் வரையில் சமாரியர்கள் கிறிஸ்துவினு டையவர்களாய் இல்லாதிருந்தார்களா? (2) ஆவியானவரின் "சாதாரண வரங்களைப்" பெறுகையில் அங்கு ஒருவரிடமும் அதற்கான வெளிப்படையான அடையாளங்கள் காணப்படாததால், பேதுருவும் யோவானும் மக்கள்மேல் தங்கள் கைகளை வைத்ததை மட்டுமே அவர்கள் கண்டிருக்க முடியும். இது எவ்விதம் தேவன் சமாரியர்களை ஏற்றுக்கொண்டார் என்று யூதருக்கோ அல்லது சமாரியருக்கோ விளக்கப் படுத்தியிருக்க முடியும்? (காணக்கூடிய அளவில்) அற்புத வரங்களைச் செய்யும் வல்லமை பொழியப்பட்டதே இந்த நிகழ்ச்சிக்கு ஏற்றதா யுள்ளது; உள்ளே வாசம் செய்யும் பரிசுத்த ஆவியின் வரத்தை இந்நிகழ்ச்சியில் அவர்கள் தரவில்லை. [10]வசனம் 16ல், "பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம் பண்ணி" என்று கூறப்படுவதால், விசேஷித்த வரங்களைப் பொழிவதற்கு அப்போஸ்தலர்கள் ஜெபத்தை ஒரு மாற்று வழியாகப் பயன்படுத்தினர் என்று சிலர் யூகித்துள்ளனர். இது ஒரு விஷயமோ அல்லது விஷயமற்றதோ அல்ல. ஏழு பேரின் மேல் (6:6) தங்கள் கைகளை வைக்குமுன்பும் அப்போஸ்தலர்கள் ஜெபம் செய்தனர். ஒவ்வொரு நிகழ்ச்சியின் போதும் ஜெபம் செய்வது அப்போஸ்தலர்களின் வழக்கமாக இருந்தது (1:14, 24; 4:24). ஆயினும் கைகளை வைத்தபோதே வரம் பொழியப்பட்டது என்பது வசனப்பகுதியில்

தெளிவாக உள்ளது (8:18).

[11]"தேவனுடைய வரம்" என்று இவ்விடத்தில் கூறப்படுவது அற்புதங்களைச் செய்யும் வரத்தையல்ல, ஆனால் அற்புதங்கள் செய்யும் வல்லமையைப் பொழியும் வரத்தை (இது அப்போஸ்தலர்களுக்கு, அவர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத் தைப் பெற்றபோது தரப்பட்ட வரமாகும்) குறிக்கின்றது. [12]பேதுருவின் கடினமான வார்த்தைகள் ஒரு முக்கியமான சத்தியத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன: பாவிகளிடத்தில் "கடினமாக நடந்து கொள்ள" ஒரு நேரமும், இடமும் உள்ளது - விசேஷமாக ஒரு பாவி உணர்வில்லாமலேயே நரகத்தை நோக்கி செல்லுகையில் இது அவசியமாகிறது! [13]தகுதியானதென்றால், இவ்விடத்தில் நீங்கள், கிறிஸ்தவர் ஒருவர் தவறு செய்து விலகும்போது, அவரை கர்த்தருக்குள்ளும், அவரது சபைக்குள்ளும் மறுபடியும் சீரமைத்துக் கொண்டு வருவதின் தேவையைக் கூறுவதில் சற்று நேரம் செலவிடலாம் (கலா. 6:1; யாக். 5:19, 20). [14]"பிலிப்பு மற்றும் பேதுருவின் பயணங்கள்" என்ற வரைபடத்தைக் காணவும். யாக்கோபின் கிணற்றருகே இயேசு சந்தித்த பெண்ணுக்கு ஒரு வழியில் அல்லது வேறொரு வழியில், இயேசு குறிப்பிட்ட "ஜீவ தண்ணீர்" (யோவா. 4:10-15) என்பது என்ன என்று கற்றுக் கொள்ள வாய்ப்புத் தரப்பட்டிருந்தது. [15]யூதமார்க்கத்தமைந்தவர் சபைக்குட்பட்டிருந்தனர் (6:5) என்று நாம் படித்திருந்த போதிலும், யூதமார்க்கத்தமைந்தவர் மனந்திரும்பினதற்கான விபரமான குறிப்புகள் எதையும் இப்பகுதி வரையிலும் நாம் படித்திருக்கவில்லை. இதுபற்றி விபரமாக இவ்விதழின் கடைசிப் பாடத்தில் விவாதிக்கப்படும். [16]ஏவப்பட்டிராத பாரம்பரியத்தின்படி, இம்மந்திரி எத்தியோப்பியாவில் நற்செய்தியை அறிமுகப்படுத்தினார். அந்தப் பாரம்பரியத்தை நாம் பெற்றிருக்கா விட்டாலும், மற்ற கிறிஸ்தவர்கள் செய்தது போலவே இந்த மந்திரியும் செய்தார் என்று நாம் புரிந்து கொள்ளும்படி லூக்கா எதிர்பார்க்கின்றார் (8:4). [17]ஊழியருக்கு ஊதியம் கொடுப்பது வசன ரீதியானதே (1 கொரி. 9) அதன் மூலம் அவர் முழு நேரமும் ஊழியம் செய்ய முடியும், ஆனால் நமது ஊழியத்தைச் செய்வதற்காக ஒரு ஊழியருக்கு நாம் ஊதியமளிக்க முடியாது. [18]அப்போஸ்தலர்கள் தங்கள் முழு நேரத்தையும் ஊழிய முயற்சியிலேயே செலவிட்டனர், அவர்களும் அவர்களின் குடும்பங்களும் சபையால் ஆதரிக்கப்பட்டனர் (3:6; 6:4; 1 கொரி. 9:1-6). [19]"பிரசங்கித்தல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது வெளிப்படையாக அறிவித்தலை மட்டும் குறிப்பிடுவதில்லை. 1 தீமோ. 2 மற்றும் 1 கொரி. 14 ன் படி, தனிப்பட்ட நிகழ்ச்சிகளில் பெண்களும் இதைச் செய்திருக்க லாம். கிறிஸ்தவப் பெண்கள் என்ன செய்தனர் என்பதற்கு எடுத்துக்காட்டுகளை அப். 18:26 ல் காணவும்.